# கனவுப் பட்டறை - புத்தக வாசிப்பு மற்றும் கலந்துரையாடல்




இந்தக் கனவுப் பட்டறை நூலின் ஆசிரியர் திரு. மதி. இது இவரின் இரண்டாவது சிறுகதை தொகுப்பு. "நம் குழந்தைகளின் மீது கருத்துத் திணித்தலையும், மன ரீதியான வன்முறையையும் நம்மை அறியாமலே நாம் வெகு இயல்பாகச் செய்து வருகிறோம்; அவர்கள் உலகில் நுழைந்து அவர்களோடு உரையாடத் தயங்குகிறோம்" என்பதைப் பதிவுசெய்வதோடு குழந்தைகளின் மீது ஏற்படும் அத்துமீறல்களையும் கனவுப் பட்டறை என்ற இந்நூலின் வழி தீர்வு காண முயன்றிருக்கிறார். ஆசிரியரின் அனுபவப் பகிர்விலிருந்து ஒரு சில பகுதிகள் இதோ உங்கள் பார்வைக்கு.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்

இக்கதையில் ஆசிரியர், கதிர் என்கிற மாணவனின் மன அழுத்தத்தைத் தீர்க்க முயல்கிறார். அவன் மிகவும் கோபக்காரன்; புத்திசாலி; கருமையான நிறம் கொண்டவன்; அவனுடன் படிக்கும் பெண்கள் யாரையும் அவனுக்குப் பிடிக்காது. சிடுசிடு என்று இருப்பான்; அவன் தன் நண்பர்களிடமும் கோபப்பட்டுக் கொண்டே இருப்பான். நடிப்புத்திறன் மிக்கவனான அவன் நாடகங்களில் நடிக்கும் போது அனைவரையும் அவன் திறமையால் கட்டிப் போட்டான்.

ஆசிரியர் அவனை தனியாக அழைத்து விசாரித்தபோது, கதிரின் வீட்டில் அவன் அம்மா இவனை எப்பொழுதும் நீ கருப்பாக இருக்கிறாய், நீ எனக்குப் பிறந்தவன் இல்லை என்று எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பாராம். கதிரின் அப்பா ஒரு குடும்பப் பிரச்சினை காரணமாகத் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவனுக்கு மிகவும் பிடித்த அவன் தங்கையும் தன் தாயுடன் சேர்ந்து கொண்டு அவனை வெறுக்க ஆரம்பித்துவிட்டாள். அண்ணன் மட்டுமே அவனுக்கு ஆதரவு. அவனும் வேலைப்பளு காரணமாக எப்போதாவது தான் கதிருடன் மகிழ்ச்சியுடன் இருப்பான். இதனால் ஏற்பட்ட மன அழுத்தத்தின் வெளிப்பாடே அவன் எப்போதும் கடு கடு என்று இருப்பதாக தெரிவித்தான். இருந்த ஒரு நண்பனும் அவனுடைய மெமரி கார்டை உடைத்ததற்காக அவனை விட்டு போய்விட்டான். எதற்குமே கலங்காத கதிர், நண்பன் பிரிந்து விட்டான் என்று கூறிய போது அழுது விட்டான். இந்த வயதில் அச்சிறுவனுக்கு எவ்வளவு வேதனை!!!

ஆசிரியர் சொன்ன தீர்வு: "கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொண்டால் தான் நீ அனைவராலும் நேசிக்கப்படுவாய். அவன் கோபப்பட்டால் சரியாகத் தான் இருக்கும் என்னும் அளவிற்கு நம் கோபம் இருக்க வேண்டும். உண்மையான நட்பைக் கண்டுபிடித்துப் பழகு. அவரைக் கண்டிப்பாக நீ பார்ப்பாய்" இவ்வாறு சொல்லிக் கொண்டே இருக்கும்போது 'அதான் நீங்க இருக்கீங்களேண்ணா' என்று கதிர் கூறினான். அப்போது இருவருமே ஒரு சகோதரத்துவத்தை உணர்ந்தனர். அவ்வாறே கடைசிநாள் கதிருக்குப் புதிய நண்பர்கள் கிடைத்தனர்.

காசிமேட்டு மீன் குஞ்சு

அடுத்ததாகக் 'காசிமேட்டு மீன் குஞ்சு' என்ற

தலைப்பில் உதயகுமார் என்ற மாணவனைப் பற்றி அவர் கூறியுள்ளார். ஒரு பெரிய யானை எப்படி ஒரு மனிதனின் சின்ன அங்குசத்திற்குப் பயந்து ஒரு தேங்காய்க்கும் வாழைப்பழத்திற்கும் உழைத்து உழைத்து சராசரியாக வாழ்ந்து தன் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறதோ, அதுபோலப் பல மனிதர்கள் சராசரியான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாமலேயே மடிந்து விடுகின்றனர். அப்படி ஒரு வாழ்க்கையில் இன்புற்றிருந்தவன் தான் உதயகுமார். கனவுப் பட்டறைக்கு வரும்போது தன்னைப் பற்றியோ தன் வாழ்க்கைப் பற்றியோ எந்த ஒரு எண்ணமும் இல்லை.

அவனைப் பற்றித் தனியாக ஆசிரியர் விசாரித்தபோது, வீட்டுக்கு ஒரே ஒரு செல்லப்பிள்ளை. கேட்டதெல்லாம் கிடைக்கும் அதிர்ஷ்டக்காரன். அம்மா அப்பா இருவரும் இணைந்து வாழுகின்ற வீட்டில் எந்த வித பிரச்சனையும் இல்லாமல் வாழ்கின்ற வாழ்க்கை அவனுக்குக் கிட்டியது. சராசரியாக மதிப்பெண் வாங்க கூடியவன். இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்பாக செயல்படலாமே என்று தோன்றியது. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் கோவில் யானையின் வாழ்க்கையைத் தான் உதயா காசிமேட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

கனவு பட்டறையில் மூன்றாம் நாள் உதயாவின் குழு நாடகம் நடிக்க வந்தபோது சில நிமிடங்கள் மந்தமாகச் சென்று கொண்டிருந்தது. வசனங்கள் காதில் கேட்கவில்லை, பார்வையாளர்கள் மெல்ல கவனம் இழந்த போது உதயா மேடையில் சேட்டை செய்தான். அவனுடைய வசனம் மறந்து போகவே குரலை மாற்றி ஜோக் அடித்தான். அதனை அனைவரும் இரசித்துச் சத்தமாகக் கைத்தட்டிப்



பாராட்டினார்கள். பலவிதமான சேஷ்டைகள் செய்து சில நிமிடங்களில் அங்கதனாக மாறித் தன்னையே மறந்து அருமையாகக் குரல் மாற்றிப் பேசி பலரது பாராட்டுகளையும் கை குலுக்களையும் வாங்கினான். இது அவனது வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது.

இதன் மூலம் உதயாவிற்குச் சினிமா ஆசை ஏற்பட்டு தான் பெரிய நடிகனாவேன் என்று பரவசமானான். முக்கியமான விஷயம் என்னவென்றால் உதயாவிற்குச் சராசரியிலிருந்து விடுபட்ட காசிமேட்டு மீன் குஞ்சு கோடம்பாக்கத்திற்கு நீந்திச் செல்ல வழி தேடுகிறது.

ஒரு ஆசிரியர் சிறிது முயற்சி செய்து, மாணவர்களின் நிலையைப் புரிந்து, அவர்களின் முன்னேற்றத்திற்கு உரிய வகையில் துணைபுரிந்தால், ஒவ்வொரு மாணவனின் மனதிலும் வாழ்விலும் நீங்கா இடம் பிடித்து விடலாம் என்பதை இந்தப் புத்தக்கம் ஒவ்வொரு பக்கத்திலும் உணர்த்துகிறது.



**ரா. அனிதா,**
தொபஆ, அதொப,
மணவெளி (அ)



**மா. மகேஷ்வரி,**
தொபஆ, அதொப,
மணவெளி (அ)